Registered as a News paper in Ceylon  விலை சதம் 15

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் செலுத்தி எண் 49 | தேசிய தினசரி | மலர் 14
போன் 389 | | இதழ் 136

யாழ்ப்பாணம் ஆனி 13 ரபி அவ்வல் 14 திங்கட்கிழமை 26-6-72

ENGLISH
PUDLO
WATER PROOF CEMENT
Price Rs. 3/50 per lb.

பட்லோ சீமெந்து
விலை: இரு ரூபா 3/50
கிடைக்குமிடம்:
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
டெலிபோன்: 7130 தந்தி: KATHIR

# பகிஷ்கரிப்பில்லை! பேரவைக்கு தமிழ்ப் பிரதிநிதிகள் செல்வர்

## அரசியல் அமைப்பைத் திருத்த அரசுக்கு 3 மாத அவகாசம்

### கூட்டத்தடை நீக்காவிடில் ஹர்த்தால்

### தமிழர் கூட்டணி தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழர் கூட்டணியைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் தேசிய அரசப் பேரவைக்குச் செல்வார்கள். "அரசியல் அமைப்பைத் திருத்தம் செய்வதற்கும் தேசிய அரசப் பேரவையின் உள்ளும் வெளியிலும் தமிழ் மக்களின் உரிமைப்போரை வழி நடத்துவதற்குமான உறுதியோடு தேசியப்பேரவைக்குச் செல்லுமாறு தமிழ்ப் பிரதிநிதிகளை தமிழர் கூட்டணி பணிக்கிறது." என்று தமிழர் கூட்டணியின் நடவடிக்கை குழு நேற்றுதீர்மானம் நிறைவேற்றியது.

தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக்குழுக் கூட்டம் நேற்று முற்பகல் கோப்பாயிலுள்ள கோப்பாய்ப் பிரதிநிதி திரு இ. கதிரவேலுப்பிள்ளையின் 'மகாவளவு' இல்லத்தில் கூடியது. முற்பகல் பதினொரு மணிக்கு திரு எஸ். ஜே. வி. தலைமையில் நடைபெற்ற இக்கூட்டம் மாலை ஆறு மணி வரை நடைபெற்றது.

## அரசுக்கு மூன்று மாத அவகாசம்

தமிழ் மக்களுடைய கோரிக்கைகளின் தன்மையையும் அவற்றை அடைய [illegible] கொள்ளும் சாத்வீக நெறியின் தத்துவத்தையும் சிங்கள மக்களுக்கு விளக்கி நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பனவற்றின் அடிப்படையில் அமைந்த ஓர் சமுதாயத்தை ஆக்குவதற்கு அவர்களுடைய சகோதர ஒத்துழைப்பைப் பெறுவதென்றும் கூட்டணி தீர்மானம் நிறைவேறியது.

தமிழ் மக்களின் உரிமைகளை உள்ளடக்க அரசியல் அமைப்பைத் திருத்த அரசாங்கத்துக்கு மூன்றுமாதகால அவகாசத்தையும் கூட்டணி அளித்தது.

யாழ்ப்பாணம் மெயின் வீதியிலுள்ள தமிழ்க்காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் நேற்றுக் காலை கூடுவதாக இருந்த தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழுவின் கூட்டம் சில காலிகள் நுழைந்து 'மறியல்' செய்தத் தொடங்கியதைத் தொடர்ந்து கோப்பாயில் நடைபெற்றது. கூட்டம் நடந்து முடியும்வரை குழுவின் கூட்டம் எங்கே நடைபெறுகிறதென்பது இரகசியமாக வைக்கப் பட்டிருந்தது.

இக் கூட்டத்தில் மட்டக்களப்பு எம். பி. திரு. எஸ். இராசதுரை, மூதூர் எம். பி. திரு தங்கத்துரை, திருமலை எம். பி. திரு நேமிநாதன் மற்றும் தமிழர் கூட்டணி எம். பிக்கள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் திரு எஸ். செல்லச்சாமி, திரு செ. சுப்பெருமாள், தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு எம். சிவசிதம்பரம் கிளிநொச்சி எம். பி. திரு வி. ஆனந்தசங்கரி, திரு வி. சிவசிதம்பரம், திரு வி. சங்கரப்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

### குழுக்கள் நியமனம்

நேரடி நடவடிக்கையில் இறங்க ஆயத்தமாக போராட்ட திட்டங்களை தயாரிக்க ஒரு குழுவும், போராட்ட நிதிசேகரிக்க ஒரு குழுவும், தொகுதி வாரியாக தொண்டர்களை திரட்ட ஒருகுழுவும் தெரிவு செய்யப்பட்டன.

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு ஜி. ஜி. பொன்னம்பலம், ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணித் தலைவர் திரு சி. சுந்தரலிங்கம் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. அடுத்த மாதம் 16-ம் திகதி நடைபெறவிருக்கும் கூட்டத்தில் இவர்கள் கலந்து கொள்வார்களெனத் தெரிவிக்கப்பட்டது.

## துக்க தினத்துடன் தடையை மீறுதல்

'வடக்கு கிழக்கு மாகாணங்களில் பொதுக்கூட்டங்களுக்கும் அமைதியான ஆர்ப்பாட்டங்களுக்கும் விதிக்கப்பட்டிருக்கும் தடை ஜூலை மாதம் 22-ந் திகதிக்கிடையில் நீக்கப்படாவிட்டால் அத்தினத்தில் பூரண துக்க தினம் அனுஷ்டிக்குமாறு மக்களைக் கோரி அன்றிலிருந்து இத்தடையை மீறுவதென்றும் தமிழர் கூட்டணி நடவடிக்கைக்குழு தீர்மானித்துள்ளது.

## அரசியல் அமைப்பில் திருத்தம்

தமிழ் மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கைகளுக்கு அங்கீகாரம் அளிக்கும்வகையில் அரசியல் அமைப்புத் திருத்தப்படவேண்டும் என்று தமிழர் கூட்டணி கோருகிறது:

(அ) அரசியல் அமைப்பில் சிங்களத்திற்கு அளிக்கப்பட்டிருக்கும் அதே இடம் தமிழுக்கும் அளிக்கப்படவேண்டும்

(ஆ) இந்[illegible] [illegible] தமிழ் பேசும் மக்களுக்கு பூரண குடியுரிமைக்கு அரசியல் அமைப்பில் உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும் பிரஜைகளில் பிரிவுகளோ அவற்றின் அடிப்படையில் பாரபட்சம் பாராட்டுதலோ இருத்தலாகாது எவருடைய குடியுரிமையையும் பறிக்கும் அதிகாரம் அரசுக்கு இருத்தல் ஆகாது

(இ) அரச மதச்சார்பற்றதாக இருக்கும் அதே [illegible] அளித்தல்வேண்டும்

(5ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ஸ்ரீமாவோவுக்கு பீகிங்கில் அமோக வரவேற்பு

பீகிங், ஜூன் 25

இலங்கை-சீன நட்புறவை விஸ்தரிக்கவும், சமீப காலத்தில் சீன நல்கிய உதவிகளுக்கு நன்றி செலுத்தவுமே தாம் சீனாவுக்கு இப்போது விஜயம் செய்திருப்பதாக பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இன்று மாலை பீகிங் மகா மண்டபத்தில் சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் அளித்த விருந்துபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். சிங்கள மொழியில் பிரதமர் இந்த உரையை நிகழ்த்தினார்.

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இன்று பிற்பகல் பீகிங் விமான நிலையம் போய்ச் சேர்ந்த போது உற்சாகமான வரவேற்பளிக்கப்பட்டது. சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் பிரதமரை அன்புடன் வரவேற்றார். விமான நிலையத்தில் திரண்டிருந்த மக்கள் கூடியிருந்த தேசியக் கொடிகளை அசைத்து ஆரவாரம் செய்தனர்.

சீனாவின் அழைப்பை ஏற்று ராஜாங்க விஜயத்தை மேற்கொண்டிருக்கும் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பீகிங் விமான நிலையத்தில் இறங்கியதும் [illegible] மொராப் பந்தலில் திரண்டிருந்த மக்கள்முன் சீனத் தலைவர்களால் வரவேற்கப் பட்டார். மரியாதை அணிவகுப்பும் நடைபெற்றது.

அலங்கரிக்கப்பட்ட திறந்த மோட்டார் காரில் 18 மைல் தூரத்துக்கு பவனியாக பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ சென்றார். பிரதமர் அருகே சீனப் பிரதமர் சூவும் அமர்ந்திருந்தார். வீதியின் இரு மருங்கிலும் சீனாவின் 70 கோடி மக்களை பிரதிநிதித்துவம் வகிக்கும் வித்தில் மக்கள் நின்றுகொண்டு கை அசைத்து தங்களின் அன்பையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டனர். பிரதமர் திருமதி ஸ்ரீமாவோவும் சிரித்த வண்ணம் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார். இப்படியான முறையில் ஒரு நாட்டின் தலைவருக்கு வரவேற்பளிக்கப்படுவது இதுவே முதல் தடவை என்று செய்தி அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் இன்று இரவு பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு விருந்தளித்தார்.

சீனப் பத்திரிகைகள் இன்று இலங்கைப் பிரதமரின் விஜயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தன

## தமிழ் மக்களுக்கு கூட்டணி வேண்டுகோள்

ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் தமிழர் கூட்டணி கீழ்க்கண்ட வேண்டுகோளை விடுக்கிறது:

0 சிந்தனை, சொல், செயல் எல்லாவற்றிலும் சாத்வீகத்தை கைப்பிடித்து மக்களின் ஆத்மீகசக்தியை உயர்த்த வேண்டும்.

0 ஒவ்வொரு மாதமும் 22-ம் திகதியை தமிழ் மக்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றுவதற்கான பிரார்த்தனை தினமாகவும் நோன்பு தினமாகவும் அனுஷ்டிக்க வேண்டும்.

0 உங்கள் சூழலில் உள்ள ஒரு நல்ல திட்டத்திற்கு மாதத்தில் ஒருநாள் சிரமதான உழைப்பைக்கொடுத்து சுற்றாடலில் உள்ளவர்களோடு பிணைப்பைப் பலப்படுத்த வேண்டும்.

0 தமிழர் விடுதலைக்கான இந்த இயக்கத்திற்கும் தமிழ் மக்களுடைய நல வாழ்விற்கும் திக்குமான பொது நிதிக்கு மாதத்தில் ஒருநாள் உழைப்பை அல்லது வாரத்தில் ஒருபிடி அரிசியை அளித்தல் வேண்டும்.

0 தமிழ்ப் பேசும் மக்களுடைய சுயாதீனத்தையும் சுயமரியாதையையும் [illegible] நாட்டக் கூடியதாக நீங்கள் அரசாங்கத்தோடும் அதைச் சார்ந்த நிறுவனங்களோடும் கொள்ளும் சகல தொடர்புகளுக்கும் தமிழையே உபயோகிக்க உறுதி பூணவேண்டும்.

0 காசி ஆனந்தன், ஆனந்தவிநாயகம் மற்றும் 70 மாணவர்களையும், விடுதலை செய்ய வேண்டும் அல்லது வழக்கு தாக்கல் செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

